ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

உதவிப் பாதுகாப்பு அலுவலா் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச்செய்வதற்கு கருத்திற்கொள்ளப்படுவதற்கு பின்வரும் தேவைப்பாடுகளுடன் கூடிய முப்படைகளில் அல்லது இலங்கை பொலிஸ் விசேட அதிரடிப்படையில் நிரந்தர சேவையில் பணியாற்றியுள்ள தகைமைபெற்ற அத்துடன் அனுபவமுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து இலங்கை மத்திய வங்கி விண்ணப்பங்களைக் கோருகின்றது.

# உதவிப் பாதுகாப்பு அலுவலா் பதவி (ஒப்பந்த அடிப்படை)

## 1.0 பணி/பொறுப்புக்கள்:

- இலங்கை மத்திய வங்கியின் அனைத்து ஊழியர்களும் அவர்களது கடமைகளை சிறந்த மட்டத்தில் நிறைவேற்றுவதற்கு இயலச்செய்வதற்கான இடரற்ற மற்றும் பாதுகாப்பான சூழலை உறுதிசெய்தல்.
- சாத்தியமான அச்சுறுத்தல்களிலிருந்து இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்கள், வருகைதருபவர்கள், ஆதனங்கள் மற்றும் சொத்துக்களைப் பாதுகாத்தல்.

## 2.0 குறைந்தபட்சத் தேவைப்பாடுகள்:

### 2.1 கல்வித் தகைமைகள்

க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் குறைந்தபட்சம் 6 சித்திகள்

### 2.2 உடலியல் தேவைப்பாடுகள்

உயரம் (i) ஆண்: 167.5 செ.மீ (5′ 6″) மற்றும் அதற்கு மேல்
(ii) பெண்: 162.5 செ.மீ (5′ 4″) மற்றும் அதற்கு மேல்

நிறை (i) ஆண்: 20 < உடல் திணிவுச் சுட்டி < 27
(ii) பெண்: 17 < உடல் திணிவுச் சுட்டி < 25

மார்பளவு (i) ஆண்: 81.3 செ.மீ (32″) குறைந்தபட்சம்

அபேட்சகர்கள் நாட்டின் எப்பாகத்திலும் எந்தவொரு களப் பணிகளையும் மேற்கொள்வதற்கான மருத்துவ, உடலியல் மற்றும் உள ரீதியாக பொருத்தமானவர்களாக இருப்பது அவசியமாகும்.

### 2.3 வயது

ஆண்: 22.03.2026 அன்று 40 வருடங்களுக்குக் குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல்

பெண்: 22.03.2026 அன்று 35 வருடங்களுக்குக் குறையாமலும் 40 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல்

### 2.4 அனுபவம்

முப்படைகளில் அல்லது இலங்கைப் பொலிஸ் - விசேட அதிரடிப்படை நிரந்தர சேவையில் கறைபடியாத மற்றும் தொடர்ச்சியான சேவையுடன் குறைந்தபட்சம் ஆண்கள் 22 வருடங்கள், பெண்கள் 15 வருடங்கள் கொண்ட அனுபவம்.

விசேட படையணிகள், வெடிபொருள், பதவிநிலைப் பொறுப்பாளர், ஆயுதம் அல்லது உடற்பயிற்சிப் போதனாசிரியர், தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு, தொடர்பாளர், புலனாய்வு போன்ற ஏனைய துறைகளில் விசேடத்துவம் பெற்றிருத்தல் மேலதிகத் தகைமையாகக் கொள்ளப்படும்.

### 2.5 முப்படைகளில்/ இலங்கைப் பொலிஸ் விசேட அதிரடிப்படையில் வகித்த பதவிநிலை:

ஓய்வுபெற்ற இலங்கை தரைப்படை, கடற்படை அல்லது வான்படையின் நிரந்தர சேவையிலிருந்த சார்ஜன்/ துணை அலுவலா் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் அதிகாரவாணையற்ற அதிகாரிகள் மற்றும் இலங்கை பொலிஸ் விசேட அதிரடிப்படையிலிருந்த சார்ஜன் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் உள்ளவர்கள்.

## 3.0 தொழில்:

மூன்று (03) ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதிக்காக ஒப்பந்த அடிப்படையில். ஒப்பந்தங்கள் தொடக்கத்தில் ஒரு (01) ஆண்டுக்காக கைச்சாத்திடப்பட்டு வங்கியின் தேவைப்பாடுகள் மற்றும் தனிப்பட்ட செயலாற்றம் என்பவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் அது மீளப்புதுப்பிக்கப்படும். ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புசெய்யப்படும் அலுவலர்கள் இலங்கை மத்திய வங்கியின் நிரந்தரப் பணிநிலையில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

## 4.0 ஊழியம் மற்றும் ஏனைய நன்மைகள்:

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பற்றுக்கான பங்களிப்புக்களுடன் ரூ. 100,000.00 கொண்ட அனைத்தையுமுள்ளடக்கிய வரி விதிகைத்தக்க மாதாந்த ஊதியம்.

## தெரிவுசெய்யப்படும் முறை

எழுத்து மூலப் பரீட்சையின் பின்னர் மருத்துவப் பரிசோதனை மற்றும் ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நேர்முகப் பரீட்சைகளின் அடிப்படையில் பொருத்தமான அபேட்சகர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

## விண்ணப்பங்கள்

தேவைப்படும் தகைமைகள் மற்றும் அனுபவத்தைக் கொண்டுள்ள ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்படிவங்களை 22.03.2026 அன்று அல்லது அதற்கு முன்னர் **பின்வரும் இணைப்பின் ஊடாக** இணையவழியில் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

இணைப்பு: https://www.cbsl.lk/Recruitments/

விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்படிவங்களைச் சமர்ப்பிக்கும் போது மேலே உள்ள இணைப்பு வழியாக அணுகக்கூடிய ஆட்சேர்ப்பு இணையவாயிலில் குறித்துரைக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை கண்டிப்பாக கடைபிடிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். விண்ணப்பப் படிவ இணையவாயிலைப் பயன்படுத்துவதற்கான விரிவான அறிவுறுத்தல்களையும் அதே இணைப்பு வழியாக அணுகலாம்.

இறுதித் திகதி வரையாக குறைந்தபட்சத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் இந்தப் பதவிக்காக கருத்திற்கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதிக்குப் பின்னர் பெறப்படும் அல்லது குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்திசெய்யாத அல்லது பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் சமர்ப்பிக்கப்படாத எந்தவொரு விண்ணப்பமும் எந்த அறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும்.

மேற்படி பதவிக்கான தகைமை அளவுகோல்களைப் பூர்த்திசெய்கின்ற சேவை அனுபவத்தை சரிபார்ப்பதற்காக கல்வி/ தொழில்சார் தகைமைகள் மற்றும் ஆவணங்களின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதிகளைப் பதிவேற்றுமாறு விண்ணப்பதாரர்கள் கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகின்றனர். **(அதாவது, பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, க.பொ.த. (சா/த.) மற்றும் (உ/த.) சான்றிதழ்கள், முப்படைகளின் சேவைப் புத்தகம்/ இலங்கை பொலிஸிடமிருந்து சேவைக் கடிதங்கள், ஏனைய தகைமைச் சான்றிதழ்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்கள்.)**

நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் நடத்தப்படும் சான்றிதழ் உறுதிப்படுத்தலின் போது தொடர்புடைய மூல ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற அபேட்சகர்கள் எக்காரணத்தின் கீழும் இப்பதவிக்கு நியமிப்பதற்குக் கருத்திற்கொள்ளப்படமாட்டர்.

எந்தவிதத்திலேனும் ஆதரவு தேடுதல் தகைமையிழக்கச் செய்யும். பூர்த்திசெய்யப்பட வேண்டிய பதவிகளின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பதற்கும் ஆட்சேர்ப்பினைப் பிற்போடுவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை இலங்கை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. தெரிவு அட்டவணைப்படுத்தப்பட்ட அபேட்சகர்கள் மாத்திரம் ஆட்சேர்ப்புச் செயன்முறையின் அடுத்த கட்டத்திற்கு தொடர்புகொள்ளப்படுவர்.

பணிப்பாளர் - மனித வளங்கள்
இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி : **011-2477330** தொலைநகல் : **011-2477715**